# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 166/2024

Prosecution witness for P.W.3.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி.செண்பகநாச்சியார். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.12.2024.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டி விநாயக நகரில் குடியிருந்து வீட்டோடு இருந்து வருகிறேன். இறந்துபோன ஆர்.கே.துரை என் தகப்பனார். அசா1 என் சித்தப்பா. அசா2 என் தம்பி. 2ம் எதிரி என் கணவர். 1, 3 எதிரிகளை எனக்கு தெரியாது. என் தகப்பனார் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். என் கணவரான 2ம் எதிரியும் என் தகப்பனாருடன் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். இந்த வழக்கு விபத்து நடப்பதற்கு 3 நாட்களுக்கு முன்பாக 28.03.2024 அன்று என் தகப்பனார் 2ம் எதிரியிடம் ரூபாய் மூன்று கோடி கொடுத்திருப்பதாக என் தாயாரிடமும் அசா2 மற்றும் என் தகப்பனாரின் நண்பர் ரவிக்குமார் என்பவரிடமும் சொல்லியுள்ளார். என் தாயாரும், மேற்படி ரவிக்குமாரும் பெண்ணை கொடுத்திருப்பதால் பிரச்சனை செய்ய வேண்டாம் என்று என் தகப்பனாரிடம் சொல்லியுள்ளார்கள். என் தகப்பனார் பணம் என்றால் ரொம்ப கராராக இருப்பார். 01.04.2024 அன்று மாலையில் 4.15 மணியளவில் 2ம் எதிரி என் தகப்பனாருக்கு கைபேசி மூலம் தொடர்பு கொண்டு எட்டையபுரம் வந்து 2ம் எதிரியின் நண்பர் என் தகப்பனாருக்கு ரூபாய் 15 லட்சம் மற்றும் வட்டி ரூபாய் ஐம்பதாயிரம் தருவதாகவும், அதை என் தகப்பனார் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தகவல் சொன்னதால் என் தகப்பனார் TN 96 C 9002 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் ஒரு கட்டை பையுடன் எட்டையபுரம் நோக்கி சென்றார். சிகேடி பள்ளிக்கு 500 மீட்டருக்கு முன்பாக

என் தகப்பனார் இருசக்கர வாகனத்துடன் ஆள் யாராவது வருவார்களா என்று பார்ப்பதற்காக நின்று கொண்டிருந்தபோது அவருக்கு பின்புறமாக லாரியை ஓட்டி வந்து மோதி என் தகப்பனாரை கொலை செய்துவிட்டார்கள். எட்டையபுரத்தில் சியாமளா பெட்ரோல் நிலையத்தில் 1 முதல் 3 எதிரிகள் பேசிக் கொண்டிருந்தது அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளது. அ.சா.ஆ 2 முதல் 5 அதாவது டைரி, ஸ்பைரல் புத்தகம் மற்றும் பத்திர நகல் ஆகியவற்றில் 2ம் எதிரியிடம் ரூபாய் 3 கோடி என் தகப்பனார் கொடுத்து வைத்திருந்ததை எழுதி வைத்துள்ளார். மேற்படி விபத்து குறித்து முதலில் 2ம் எதிரி எனக்கு கைபேசி மூலம் மாலை 6 மணியளவில் என் தகப்பனாருக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். எங்கள் குடும்பத்தில் பெண்கள் யாரும் வரவேண்டாம் என்று 2ம் எதிரி சொன்னார். தகவல் கிடைத்தவுடன் அசா1, மேற்படி ரவிக்குமார், 2ம் எதிரி ஆகியோர் சம்பவ இடத்திற்கு போனார்கள். அதுகுறித்து அசா1 புகார் கொடுத்து அதில் 2ம் எதிரி அறிவேன் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளார். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பிரேதத்தை 2ம் எதிரிதான் கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டார். 04.04.2024 அன்று அசா2 க்கு போலீசார் தகவல் சொல்லி குற்றம் செய்தவர்களை கைது செய்து வைத்திருப்பதாக சொன்னவுடன் அசா2 எட்டையபுரம் காவல்நிலையம் சென்றார். எதிரிகள் சதித்திட்டம் தீட்டி 2ம் எதிரி என் தகப்பனாருக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காமல் இருப்பதற்காக என் தகப்பனாரை லாரி வைத்து கொன்றதாக போலீசார் அசா2 க்கு சொல்லி அசா2 எனக்கு சொன்னார். காவல்நிலையத்தில் 1 முதல் 3 எதிரிகளை போலீசார் கைது செய்து வைத்திருந்ததாக அசா2 சொன்னார். எனக்கும், 2ம் எதிரிக்கும் நடந்த திருமணத்திற்காக என் தகப்பனார் எங்களுக்கு விநாயக நகரில் என் தகப்பனார் வீட்டின் அருகிலேயே ஒரு வீடு மற்றும் கார் வாங்கி கொடுத்தார். மேற்படி லாரி டிப்பர் லாரி என்பதை தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் கணவரான 2ம் எதிரியை தவிர மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. 1, 3 எதிரிகள் எங்கு என்ன தொழில் செய்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. நான் அவர்களை பார்த்ததில்லை. 2ம் எதிரியும், என் தகப்பனாரும் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். மாலை 4.15 மணியளவில் என் தகப்பனாருக்கு 2ம் எதிரி எட்டையபுரம் அருகில் ரூ.15 லட்சம் மற்றும் வட்டி ரூபாய் ஐம்பதாயிரம் ஆகியவற்றை 2ம் எதிரியின் நண்பர் தருவதாகவும் அதை பெற்றுக் கொள்ளும்படியும் தகவல் வந்ததாக போலீஸ் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன். 01.04.2024 அன்று எங்கள் வீட்டிற்கு விபத்து நடந்தது என்று தகவல் வந்தது. முதல் விசாரணையில் விபத்து என்பதை தவிர நான் சொல்லியுள்ள இதர சங்கதிகள் எனக்கு நேரில் தெரியாது. பிறர் சொல்லித்தான் தெரியும். 04.04.2024 அன்று போலீசார் 1 முதல் 3 எதிரிகளை கைது செய்து வைத்திருப்பதாக அசா2 க்கு தகவல் சொல்லி அசா2 என்னிடம் சொன்னார். 04.04.2024 அன்று அசா2 எனக்கு தகவல் சொன்னதாக சொல்லும்போது காலை 10 மணியிருக்கும். போலீசார் என்னை முதன் முதலாக விசாரிக்கும்போதே மேற்படி கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வாளர் கைபேசி மூலம் எனக்கு காட்டினார்கள். ஆய்வாளர் என்னை முதன்முதலாக 10.04.2024 அன்று விசாரித்தார்கள். அதற்கு முன்பாக போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை. நானும், என் தாயாரும் ஒரே வீட்டில்தான் இருக்கிறோம். என் தாயாரையும் 10.04.2024 அன்றுதான் முதன்முதலாக விசாரித்தார்கள். என் கணவரை கைது செய்த பிறகு இன்றுவரை நான் பார்க்கவில்லை. என் கணவர் பிணையில் வெளியில் வந்தால் நான் அவருடன் சேர்ந்து வாழ வாய்ப்பு உள்ளதா என்றால் அதை நான் இப்போது முடிவு செய்யவில்லை. என் கணவருடன் நான் வாழும்போது அவரது நடத்தையில் நான் சந்தேகப்பட்டு எங்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. என் தகப்பனார் 2ம் எதிரியிடம் கொடுத்ததாக சொல்லப்படும் 3 கோடி சம்பந்தமாக நான் 2ம் எதிரியிடம் கேட்டேன். நான் அப்படியெல்லாம் ஒன்று வாங்கவில்லை என்றும், இறந்த நபருக்கு கொடுக்க வேண்டியதும்

இல்லை என்றும், 2ம் எதிரி சொன்னார். அதுகுறித்து நான் என் தாயாரிடம் சொல்லவில்லை. என் தகப்பனாரிடமும் அதுகுறித்து நான் கேட்டுக்கொள்ளவில்லை. என் தகப்பனாருக்கு எழுத படிக்க தெரியாது. இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லும் காலத்தில் நான் என் கணவருடன் தனியாக குடியிருந்தேன். என் பெற்றோருடன் குடியிருக்கவில்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2024.12.18 19:39:52 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.